**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களானவை ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பத எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ரூபா 5,474,565 இற்கான நிலுவை வீத வரி கணக்கின் மீதி அப் பட்டோலை காட்டப்பட்டுள்ள ரூபா 6,177,057 இற்கான நிலுவை மீதியுடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 702,450 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய இரண்டு கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 57,340,418 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,266,425 இற்கான மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 750,547 இற்கான மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 67,686,049 இற்கான செலுத்த வேண்டிய மூன்று கணக்கு மீதிகளின் பெறுமதியில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த ரூபா 917,925 இற்கான மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 330,241 தொகை தொடர்ந்தும் செலுத்த வேண்டியிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 32,178,488 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும்

செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,344,286 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 17,834,202 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

தலைவரின் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | ஆண்டின் போது சிட்டை இடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியில் அறவிடப் படாத தொகை | 2014 சிட்டை இடப்பட்ட வருமானத் தில் அறவிடப் படாத தொகை | அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2014.01.01 திகதி உள்ளவாறு நிலுவையாக சேகரித்த வருமானம் | 2014 ஆண்டின் போது சிட்டை யிடப்பட்ட வருமான த்தில் சேகரித்த வருமானம் | | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி மற்றும் வரி | 2,107,552 | 9,990,215 | 518,943 | 6,018,509 | 1,588,609 | 3,971,706 | 5,560,315 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 126,461 | 1,565,162 | 55,050 | 1,403,117 | 71,411 | 162,045 | 233,456 |
| குப்பை வரி | 253,000 | 1,026,000 | 251,000 | 960,000 | 2,000 | 66,000 | 68,000 |
| கடை வாடகை | 40,050 | 32,400 | 17,150 | 16,000 | 22,900 | 10,400 | 39,300 |
| நீர்க் கட்டணம் | 69,065 | 98,780 | 24,790 | 98,780 | 44,275 | - | 44,275 |
| நீதி மன்றத் தண்டப் பணம் | 388,567 | 750,907 | 388,567 | 294,412 | -- | 456,495 | 456,495 |
| முத்திரைக் கட்டணம் | 16,701,372 | 29,979,901 | 11,232,404 | 7,321,864 | 5,468,968 | 22,658,037 | 28,127,005 |

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 34,527,846 இற்கான நிலுவை வருமானத்தில் 2015 ஜூன் 30 திகதி வரை ரூபா 34,522,653 தொகையென மேலும் நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.2 நிலுவை கடை வாடகை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடு செய்யப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 39,300 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 09 கடைகளில் இருந்து 09 மாதம் முதல் 05 வருடங்கள் வரை கால வித்தியாசத்திற்காக ரூபா 35,650 இற்கான வாடகை

காணப்பட்டது. அந்த வாடகை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்று கடைபிடிப்பதற்காக சபை செயற்பட்டிருக்கவில்லை.

2.2.3 தொலைபேசி செலுத்துகை டவர்களுக்காக வர்த்தக வரி

---

02 தொலைபேசி கம்பனிகளினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலைபேசி செலுத்துகை டவர்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 26,400 இனை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.4 அறிவித்தல் பலகைக் கட்டணம்

---

இலக்கம் 1834 மற்றும் 2013 அக்டோபர் 25 திகதி ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை அறிவித்தலின் பிரகாரம் நிரந்தர அறிவித்தல் பலகை ஒன்றிற்காக ஒரு வருடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூபா 50 கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 56 அறிவித்தல் பலகைகளின் மூலம் ரூபா 134,650 இற்கான தொகையொன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 456,495 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 28,217,005 உம் கிடைக்க வேண்டியிருந்தது. இம் மீதியில் 2015 ஜூன் 30 திகதி வரை நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 52,200 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 23,739,455 உம் மேலும் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---

சபைக்குச் சொந்தமான 11 மயானங்களின் அவற்றிற்கான அளவை விடயங்கள் மேற்கொண்டு எல்லைகளை அடையாளமிட்டு வேலிகள் போடப்பட்டு சொத்துக்களை பாதுகாப்பதற்காக நடவடிக்கைக் எடுக்கப்பட வேண்டும். எனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மயானங்களுக்கு அண்மையிலுள்ள வதிபவர்களால் காணிகள் பிடிக்கப்பட்டு காணப்படுவதை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

3.2 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

---

சபையினால் மீளாய்வாண்டின் போது தார் போடப்பட்ட பாதைகள் தொடர்பாக பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் 2014 அக்டோபர் 10 திகதி ரூபா 518,750 பெறுமதியான 25 தார் பீப்பாக்கள் மற்றும் 05 கோலா பீப்பாக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து வழங்கியிருந்த 286 கல்வணய்ஸ் குழாய்கள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் ஜீஐ குழாய்கள் மூலம் மேற்கொள்ளக் கூடிய எந்த ஒரு செயற்திட்டத்தையும் இனங்கண்டிருக்கவில்லை.

3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள சேவை இடை நிறுத்தப்பட்டுள்ள வெளிநாடு சென்றுள்ள மற்றும் இறந்துள்ள அலுவலர்கள் 8 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 43,033 இற்கான கடன் மீதி ஒன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 32 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அவற்றை உடைத்து அகற்றுவதற்காக செயற்பட்டிருக்கவில்லை. அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை சட்ட ரீதியான வைப்பாக மாற்றும் போது அறவீடு செய்யப்பட வேண்டிய அங்கீகாரமற்ற கட்டணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை. தெரிவுப் பரிசோதனையின் போது 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 221,500 இற்கான தண்டப் பணம் அறவீடு செய்யப்படவில்லை.

3.5 ஒப்பந்த நிருவாகம்

----------------------------------

(அ) உடுவாவல கிழக்கு ரணவன சுபானீ கடைக்கு அண்மையில் இருந்த பொல்வத்தை பாதையுடன் இணையும் துணைப் பாதையை கொங்கிரீட் பண்ணுதல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 980,000

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

(i) 1:2:4(3/4)'' கொங்கிரீட் கலவையில் 05 அங்குலம் கனத்தில் பாதை கொங்கிரீட் பண்ணப்பட வேண்டும். எனினும் பாதையின் ஆரம்பத்தில் இருந்து 162 அடி இடத்தில் பாதையின் மத்தியில் கொங்கிரீட் படை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது அதனது கனம் 3'' களாகக் காணப்பட்டதென வெளிப்படுத்தப்பட்டது. மேலும் நியம கலவை போடப்படாமையால் மிகவும் இலேசாக உடைக்கக் கூடிய மட்டத்திலான பலவீன கொங்கிரீட் கலவை ஒன்று போடப்பட்டு பாதை நிர்மாணிக்கப்பட்டிருந்தென அவதானிக்கப்பட்டது. பாதையின் 08 இடங்கள் வெடிப்படைந்து காணப்பட்டது என 2015 பெப்ரவரி 20 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) செயற்திட்டத்திற்காக பெயர் பலகைக்காக ரூபா 7,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெயர் பலகை பொறுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொகலவெல பொது விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 660,332

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

(i) நிர்மாண வேலைக்காக முன் சாத்தியக் கூறு அறிக்கை ஒன்று, முறையான வரைபுகள், மதிப்பீடுகள் ஒன்று தயாரிக்கப்படாமல் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம் மண் நிரப்பி பூர்த்தி செய்யப்பட்ட பகுதிக்கு எல்லையில் பாரிய அளவினதான சதுப்பு நிலம் ஒன்று காணப்பட்டதுடன் அப் பூமியை விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு நோக்குடன் இந்த செயற்திட்டம் அமுல் நடத்தப்பட்டாலும் அத் தரையில் சுமார் நூற்றிற்கு 05 பகுதி இதன் கீழ் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(iii) கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம், 1.36 கனமீற்றர்களுக்காக ரூபா 17,408 தொகை ஒன்று வடிகால் முறையை தயாரிப்பதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனைப் பயன்படுத்தக் கூடிய நிலைமையில் அது காணப்படவில்லை என 2015 பெப்ரவரி 20 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் பயனற்ற செலவு ஒன்றாகியுள்ளது.

(இ) கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்படாமை

--------------------------------------------------------------------

1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதிகள் 177 மற்றும் 178 ஏற்பாடுகளுக்கு மாற்றமாக கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்படாமல் சபை நிதியத்தில் இருந்து ரூபா 5,310,000 தொகையான 53 நிர்மாண வேலைகள் சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு சாட்டப்பட்டிருந்தன.

3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

சபையின் அதிகாரப் பிரசேத்தில் நாளாந்தம் 8 – 8½ தொன்கள் அளவில் குப்பைகள் சேகரிக்கப்படுவதுடன், குப்பைகள் சேகரிப்புக்காக 03 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டு குப்பைகளை வகைப்படுத்தாமல் சபைக்கு சொந்தமான காணி ஒன்றில் போடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 பெறுகைகள் திட்டம்

---

மீளாய்வாண்டின் போது பெறுகைகள் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 அகக் கணக்காய்வு

---

மீளாய்வாண்டின் போது சபையின் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 03 வருமான விடயங்களில் நூற்றிற்கு 34 முதல் நூற்றிற்கு 83 வரையும், 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் நூற்றிற்கு 50 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்